**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.499/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W-6 |
| Name | : | முருகன், வயது 40 |
| Father Name/Husband Name | : | மாடசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of December 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில்) உள்ள 2 வது கையொப்பங்கள் என்னுடையது தான். அதனை நான் காவல்நிலையத்திற்கு சென்ற போது காவலர்கள் கேட்டுக் கொண்டதற்கு இனங்க செய்து கொடுத்தேன்.
2. (**அந்த கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)**

1. கடந்த 11.03.2023 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் கிழக்கு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நீங்களும் சாட்சி ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் அதன் பின்னர் அதே தேதியில் அதிகாலை 03.15 மணியவில் கோவில்பட்டி சுப்பிரமணியாபுரம் 3 வது தெருவில் இருந்து சுத்தியல் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அந்த அத்தாட்சியிலும் நீங்கள் 2 வதாக கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**
**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.